

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கண்ணந்தாங்கல் ஊராட்சியில் வாக்குச்சாவடி முகவர்கள் கள ஆய்வுக் கூட்டம் ஒன்றிய சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சிவா ஏற்பாட்டில் ஒன்றிய குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி தலைமையில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து, தேர்தல் பணிகள் குறித்தும், வரும் தேர்தலில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள், கிளைச் செயலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார். இந்நிகழ்வில் சிவபாதம், பால்ராஜ், பொடவூர் ரவி, சந்தவேலூர் சத்தியா, ஆண்டனி வினோத்குமார், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் – மதுரவாயலில் திராவிட பொங்கல் விழா!

# 3,600 கழக நிர்வாகிகளுக்கு மூன்று கட்டங்களாக புத்தாடைகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்! நொளம்பூர் வே.ராஜன் – அயப்பாக்கம் துரை வீரமணி– பி.டி.பாண்டிச்செல்வம் பங்கேற்பு!

சென்னை, ஜன. 08-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் திராவிட பொங்கல் விழா சமூக நீதிக்கான கொண்டாட்டம் - 3600 கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்களுக்கு மூன்று கட்டங்களாக புத்தாடைகள் வழங்கும் நிகழ்ச்சி என்னுடைய ஏற்பாட்டில் (காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ.) இன்று (08.01.2026) மாலை 5.00 மணியளவில் போரூர், சரிதா மஹாலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியின் முதற்கட்டமாக சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், M.C., வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, மதுரவாயல் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் பி.டி. பாண்டிசெல்வம் ஆகியோரும் மற்றும் கழக நிர்வாகிகளும் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள்.

ஆகவே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், தகவல் தொழில்நுட்ப பிரிவு தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், அணிகளின் பகுதி,

வட்ட, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2), BDA அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளர், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

### தலா ரூ.3 ஆயிரம் ரொக்கப் பரிசுடன் பொங்கல் தொகுப்பு!

# ஆலந்தூருக்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### கழகத்தினருக்கு – ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, ஜன.8-

ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

ஆலந்தூர் தொகுதி, கண்டோன்மெண்ட் நசரத்புரத்தில் உள்ள ரேஷன் கடையில் கரும்பு, பச்சரிசி, சர்க்கரை, ரூ.3000/- ரொக்கம் ஆகிய உள்ளடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பை தொடங்கி வைத்திட இன்று 8-ஆம் தேதி வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திரண்டு வந்து, கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் காலை 9.00 மணியளவில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர்தா.மோ.அன்பரசன் தலைமையில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக் குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞரணியினர், மாணவரணியினர், மகளிரணியினர், பாக முகவர்கள் (BLA-2), கழக தோழர்கள், கட்டாயம் இருவர்ண கழக கொடியுடன் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் தெரிவித்துள்ளார்.

### மு. செல்வகுமார் தலைமை! முன்னிலை: கே.ஏழுமலை – கோ. சு.மணி

# 135 (அ) வட்டத்தில் திராவிட பொங்கல் விழா - நல உதவிகள் !

### மயிலை த. வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்! தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – ஜெ . கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜன.8-

தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 135 (அ) வட்ட தி.மு.க.சார்பில் கழக நிர்வாகிகளுக்கு தமிழர் திருநாளை முன்னிட்டு புத்தாடை வழங்கும் விழா இன்று (08.01.2026 - வியாழக்கிழமை) மாலை 5:30 மணி அளவில் அசோக் நகர் முதல் அவென்யூ எம்.பி.கே. மஹாலில் 135 (அ) வட்டக் கழக செயலாளர் மு.செல்வகுமார் தலைமையில் நடைபெறுகிறது.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சுமணி, தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்கினறனர்.

இதில் சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நலஉதவிகளை வழங்குகிறார்.

இதில் வட்ட கழக செயலாளர்கள் ஆர்.லோகு, மு.மா.செந்தில்குமார், எம்.கே.மூர்த்தி, ஜி.பி.செந்தில்குமரன், ஆர்.சக்திவேல், லலிதாபுரம் என்.துரை, எஸ். லட்சுமிகாந்தன், தியாகராய நகர் மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் ந.மோ.முரளி, கே.எஸ். வெல்டிங் ராஜா, பி.மாரி, பி.நாணு (எ) ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எனவே 135 (அ) வட்ட கழகத்தை சார்ந்த இன்னால் முன்னால் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, BAD பாகத்தின் இளைஞரணி அமைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. தலைமையில்

# மண்டலம் 15-ல் உள்ளடங்கிய வார்டுகளின் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் வி.இ.மதியழகன் எம்.சி. பங்கேற்பு!

சென்னை, ஜன. 08-

சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15 மண்டல அலுவலக கூட்ட அரங்கில் 06/01/2026 அன்று கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் நடைபெற்றன.

இக்கூட்டத்தில் மண்டலம் 15-ல் உள்ளடங்கிய வார்டு எண்கள் 192, 193, 194, 195, 196, 197, 198, 199, 200 ஆகிய வார்டுகளில் மழைநீர் வடிகால் வாய் பணிகள் நடைபெறும் போது பாதுகாப்பு வேலி அமைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெறும் இடங்களில் இடைவெளி இல்லாமல் அமைக்க வேண்டுமெனவும், மேலும் விடப்பட்ட தெருக்களில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் மழைநீர் வடிக்கால்வாய் திட்டப் பணிகளை விரைந்து துவங்க வேண்டும்.

குடிநீர் குழாய் மற்றும் மின்சார கேபிள்களுக்கு எந்த விதமான இடர்ப்பாடுகள் இல்லாமல் பணிகள் நடைபெற வேண்டுமென கலந்தாய்வு ஆலோசனை கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் மாநகராட்சி அரசு அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் 15-வது மண்டல குழு தலைவர் V.E மதியழகன்,மாமன்ற உறுப்பினர்கள், க.ஏகாம்பரம், T.C கோவிந்தசாமி G.சங்கர்,A.முருகேசன், விமலா கர்ணா, மேனகா சங்கர், மற்றும் மண்டலம் 15 உதவி ஆணையர் உள்ளிட்ட அனைத்து துறை மாநகராட்சி அதிகாரிகள் அனைவரும் உடனிருந்தனர்.



ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய பாகங்களின் ஆலோசனைக் கூட்டம் 06.01.2026 செவ்வாய்க்கிழமை மாலை 7:30 மணியளவில் பாக முகவர்கள் திலீப் குமார் (355), சீனிவாசன் (356), விக்னேஷ் காளிதாஸ் (377), பிரான்சிஸ்(382) ஆகியோர் தலைமையிலும், 167 வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், மாமன்ற உறுப்பினர் திருமதி துர்காதேவி நடராஜன், மாவட்ட பிரதிநிதிகள் ரமணா, அபிஷேக் கிருஷ்ணா, முன்னிலையிலும், நங்கநல்லூர் டி.என். ஜி. ஓ. காலனியில் உள்ள அருணா மஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளரும், மாநில தகவல் தொழில்நுட்ப அணியின் துணை அமைப்பாளர் திருமதி பத்மப்ரியா, ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும் 12வது மண்டல குழு தலைவருமான, என். சந்திரன் ஆலோசனை வழங்கினார்கள். இக்கூட்டத்தில் BLC, BDA, வட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

